

# ஆகஸ்ட் 15

## புனித கன்னிமரியின் விண்ணேற்பு

கன்னிமரியாள் இறக்கும் நேரம் வந்தது. கடவுளின் விசேஷ வரத்தால் எல்லா அப்போஸ்தலர்களும் கூடினார்கள். அவள் இறந்ததும் சிறப்பாக அவளை அடக்கம் செய்தனர். தாமதமாக தோமையார் வந்தார். அன்னையின் முகத்தை எப்படியாவது பார்க்க வேண்டுமென்று வற்புறுத்தினார். ஏனைய சீடர்களும் அதை இன்னொரு தடவை பார்க்க விரும்பினர். கல்லறையைத் திறந்து பார்த்தார்கள். அன்னையின் உடலை அங்கு காணோம். தம்மைச் சுமந்த அன்னையின் உடல் அழிவுற கடவுள் விரும்பவில்லை. இயேசுவும் மரியாளும் சாவு என்னும் வாயில் வழியாக மோட்சத்திற்குச் சென்றார்கள். மரியாளும் இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்டாள் என்று சொல்லலாம். இயேசு பரலோகத்துக்குச் சென்ற பின் அவள் தேவசித்தத்திற்குக் கீழ்ப்படிந்து பூமியில் பொறுமையுடன் காத்திருந்தாள்.

இயேசு நன்றியுள்ளவர், தம் அன்னை தமக்கு பூமியில் செய்தவற்றை அவர் மறக்கவில்லை. மோட்சத்தில் அவளுக்கு தம் அருகில் ஓர் உயர்ந்த அரியணையைக் கொடுத்திருக்கிறார். அங்கிருந்து அவள் நம் அனைவரையும் அன்புடன் நோக்குகிறாள். அவள் நமக்கு அடைக்கலம், ஆறுதல், நம்பிக்கை, மகிமை, ஆனந்தம், நமது அரசி பரகதியில் கடவுளது மகிமையைப் பார்ப்பது நமது பேரானந்தமாய் இருக்கும். அதற்கு அடுத்தபடியான ஆனந்தம் அழகின் முழுமையான நம் அரசியைக் கண்டு மகிழ்வதே.

**சிந்தனை:** நாம் மோட்சம் செல்ல நடந்து செல்ல வேண்டிய ஏணி மரியாளே. இந்த ஏணி வழியாகவே இயேசு இந்தப் பூமிக்கு வந்தார். மரியாள் வழியாகவே நாம் மோட்சம் செல்ல வேண்டும் என்பது கடவுளது விருப்பம். (புனித புல்ஜென்ஸியுஸ்)

**செபம்:** ஓ விண்ணரசியே, மண்ணுலகில் இருக்கும் உம் மக்களை மன்னித்து ஏற்றருளும்.